செல்கின்றன, சென்னை நோக்கி ஆறு பேருந்துகள் வருகின்றன. ஆகமொத்தம் 12 பேருந்துகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.

* வினு 417 திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் மதுரை மாவட்டத்தில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன? அதன்மூலம் தினசரி வருமானம் எவ்வளவு?

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை ஓடியிருக்கும் சராசரி வருடங்கள் எவ்வளவு?

(இ) 1974-75, 1975-76-ல் எத்தனை பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மாவட்டத்தில் 476 பேருந்துகளை ஓட்டியது. அதன்மூலம் கிடைக்கும் சராசரி வருமானம் சுமார் ரூ. 2,79,000.

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை சராசரியாக 5 வருடங்கள் ஓடியிருக்கின்றன.

(இ) 1974-75-ல் 29 பேருந்துகளும், 1975-76-ல் 18 பேருந்துகளும் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, டி. வி. எஸ். கம்பெனியிலிருந்து இந்த பஸ்களை அரசு தேசியமயமாக்கி எடுத்துக்கொண்ட நேரத்தில் எத்தனை வண்டிகள் பயனற்றவையாக இருந்தன, அந்தப் பயனற்ற வண்டிகளுக்கு அரசு பணம் கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, பயனற்ற வண்டிகளை எடுத்துக்கொள்வதில் பயனேதும் இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட வண்டிகள் ஏதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

1978 மார்ச் 6]

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, பொது மக்களுடைய போக்குவரத்து அன்றாடம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்துகளை ஒவ்வொரு ஊருக்கும் அதிகப்படுத்தும் உத்தேசத்தில் இப்பொழுது ஏதேனும் திட்டமிடப் பட்டிருக் கிறதா? அப்படியிருந்தால் மதுரை மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களுக்குப் பஸ் விடுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளையும், மொபசல் பேருந்துகளையும் மிகைப் படுத்தத் திட்டம் உள்ளது. விரைவில் அதுபற்றிப் பரிசீலித்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பி. ஆர். சி.யில் மாணவர்களுக்குப் பஸ் பாஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அப்படியென்றால் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாநகரில் ஏற்கனவே சலுகைக் கட்டண வசதி இருந்து வருகிறது. மேற்கொண்டு பரிசீலனை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண். 418.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூன்று கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

மாதவரம் பால்பண்ணை.

*வினா 418 திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் லைசென்ஸ்தாரர் எத்தனை பேர் உள்ளார்கள்?

(ஆ) எவ்வளவு மாடுகள் உள்ளன?

(இ) என்ன விலைக்கு லைசென்ஸ்தாரரிடம் பால் வாங்கப்படு கிறது?

(ஈ) என்ன விலைக்கு விற்கப்படுகிறது?